# THE KARUR VYSYA BANK LIMITED

KVB Karur Vysya Bank
Smart way to bank

Registered & Central Office, No. 20, Erode Road, Vadivel Nagar, L.N.S., Karur – 639002
[CIN No: L65110TN1916PLC001295]
[e-mail:kvb_sig@kvbmail.com] [Website: www.kvb.co.in]
[Tel No: 04324-269441] [Fax No: 04324-225700]

## காணொலி காட்சி வாயிலாக நடைபெறும் 102வது வருடாந்திர மகாசபை கூட்டம்

நிகழும் 2021 ஆம் வருடம் ஆகஸ்ட் மாதம் 11ஆம் தேதி புதன்கிழமை காலை 11 மணி அளவில் மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்களை நிறைவேற்றும் பொருட்டு வங்கியின் 102வது வருடாந்திர மகாசபை கூட்டம் காணொலிக் காட்சி வாயிலாக நடைபெறும் என்பதை வங்கி உறுப்பினர்களின் மேலான கவனத்திற்கு இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

உலகமெங்கும் பரவி உள்ள COVID-19 பெருந்தொற்றின் தாக்கம் தொடரும் நிலையில் சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டிய தேவையை முன்னிட்டு இந்திய அரசின் பெருநிறுவனங்கள் விவகாரத்துறை அமைச்சகமும் (MCA), இந்திய பங்கு பரிவத்தனை வாரியமும் (SEBI) தங்களின் பல்வேறு சுற்றறிக்கைகளின் மூலம் (சுற்றறிக்கைகள் விவரம்: Ministry of Corporate Affairs (MCA) Circulars Nos. 20/2020 dated 05.05.2020, 02/2021 dated 13.01.2021, 14/2020 dated 08.04.2020 and 17/2020 dated 13.04.2020; SEBI Circular Nos. SEBI/HO/CFD/CMD2/CIR/P/2021/11 dated 15.01.2021, SEBI/HO/CFD/CMD1/CIR/P/2020/79 dated 12.05.2020) 2021ஆம் வருடத்திற்கான வருடாந்திர மகாசபை கூட்டத்தினை காணொலி காட்சி வாயிலாக நடத்துவதற்கான பல்வேறு வழிகாட்டுதல்களையும் சில நடைமுறை விலக்குகளையும் வழங்கியுள்ளது.

மேற்கண்ட சுற்றறிக்கைகளின்படி அச்சிடப்பட்ட ஆண்டு அறிக்கையை பங்குதாரர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டிய நடைமுறையில் இருந்து விலக்கு அளிக்கபட்டுள்ளது. எனவே, வங்கியின் 102வது மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2020-21ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையும், மின்னஞ்சல் முகவரியினை வங்கியிடமோ, முதலீட்டு பங்மேற்பாளரிடமோ (Depository Participant), வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடமோ (Registrar & Transfer Agent) பதிவு செய்து உள்ள அனைத்து உறுப்பினர்களுக்கும் மின்னஞ்சல் மூலமாக அனுப்பி வைக்கப்படும். மேலும் 102வது மகாசபை கூட்டத்திற்கான அறிவிப்பும், 2020-21 ஆம் ஆண்டிற்கான ஆண்டு அறிக்கையும் வங்கியின் இணைய தளத்திலும் (https://www.kvb.co.in/investor-corner/annual-general-meeting/), தேசிய பங்குகள் வைப்பு நிறுவனம் (NSDL - https://www.evoting.nsdl.com) மற்றும் தேசிய பங்குச் சந்தை (NSE - www.nseindia.com) ஆகியவற்றின் இணையதளங்களிலும் பதிவேற்றம் செய்யப்படும்.

மகாசபை கூட்ட அறிவிப்பில் கொடுக்கப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி வங்கியின் உறுப்பினர்கள் காணொலி காட்சி வாயிலாக மட்டுமே மகாசபை கூட்டத்தில் பங்கேற்க முடியும். அவ்வாறு பங்கேற்கும் உறுப்பினர்களது எண்ணிக்கையின் அடிப்படையில் நிறுமச்சட்டம், 2013 பிரிவு 103-ன் படி மகாசபை கூட்டம் நடத்துவதற்கு போதுமான அளவில் உறுப்பினர்கள் பங்கேற்பு குறித்து கணக்கிடப்படும்.

மகாசபை கூட்ட அறிவிப்பில் கண்டுள்ள தீர்மானங்கள் மீது வங்கியின் அனைத்து உறுப்பினர்களும் தொலைதூர மின்னணு வாக்களிப்பு (Remote e-Voting) முறையின் வழியே வாக்கு அளிப்பதற்கான வசதியை வங்கி ஏற்படுத்தித் தரும். மேலும் மகாசபை கூட்ட நாளன்று மின்னணு வாக்களிப்பு (e-Voting) முறையில் வாக்கு அளிப்பதற்கான வசதியினையும் வங்கி ஏற்படுத்தித் தரும். தொலைதூர மின்னணு மற்றும் மின்னணு முறையில் வாக்கு அளிப்பது தொடர்பான மேலதிக வழிமுறைகள் மகாசபை கூட்ட அறிவிப்பில் வெளியிடப்படும்.

**<u>பங்காதாயம் (Dividend):</u>**

இந்திய ரிசர்வ் வங்கி 2020-21 ஆம் ஆண்டிற்கான லாபத்தில் இருந்து வங்கிகள் பங்காதாயம் அளிப்பது தொடர்பான 22.04.2021 தேதியிட்ட சுற்றறிக்கையில், தனது 04.05.2005 தேதியிட்ட சுற்றறிக்கையில் அனுமதிக்கப்பட்ட அளவிலான பங்காதாயத்தில் 50% -தை மட்டுமே அளிக்குமாறு அறிவுறுத்தி உள்ளது. அதற்கு இணங்க, சட்ட அதிகாரம் பெற்ற அமைப்புகள் மற்றும் நடைபெற உள்ள மகாசபை கூட்டத்தின் மூலம் பங்குதாரர்கள் ஆகியோரின் ஒப்புதலை பெற்று 31.03.2021 நாளன்று முடிவுற்ற நிதி ஆண்டிற்கான பங்காதாயமாக வங்கியின் ஒவ்வொரு இரண்டு ரூபாய் முகமதிப்பிலான சமஉரிமை பங்குகளுக்கும் 50 பைசா வீதம் வழங்க வங்கியின் இயக்குநர் அவை 28.05.2021 ஆம் தேதி அன்று நடந்த தனது கூட்டத்தில் பரிந்துரைத்துள்ளது.

**<u>வங்கி பதிவேடுகள் மூடப்படும் தேதிகள் குறித்த விவரம் (Dates of Book Closure) :</u>**

நிறுமங்கள் சட்டம் 2013, பிரிவு 91 மற்றும் அதன்கீழ் ஏற்படுத்தப்பட்ட விதிகளின் படியும் மேலும்இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியத்தின் (பட்டியலிடுவதற்கான கடமைகள் மற்றும் தேவையான வெளியீடுகள்) கட்டுப்பாடுகள், 2015 (SEBI LODR 2015) -ன் 42வதுகட்டுப்பாட்டின் படியும், வங்கியின் உறுப்பினர் பதிவேடு மற்றும் பங்கு மாற்றுபுத்தகம் ஆகியவை 27.07.2021 முதல் 11.08.2021 வரை மூடப்பட்டு இருக்கும்.

**<u>பங்காதாயத்தில் வரிப்பிடித்தம் குறித்த விவரம் (TDS on Dividend) :</u>**

நிதிச்சட்டம் 2020ன் மூலம் வருமான வரிச்சட்டம் 1961ல் ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்களின்படி, 01.04.2020 -இல் இருந்து நிறுமங்கள் அளிக்கும் பங்காதாயம் பங்குதாரர்களின் வரிவருமானத்திற்கு உட்பட்டதாகும். எனவே வங்கி அளிக்கும் பங்காதாயத்தில் இருந்து குறிப்பிட்ட விகிதத்தில் வரிப்பிடித்தம் செய்ய வேண்டியுள்ளது. வரிப்பிடித்தம் செய்யும் விகிதமானது பங்குதாரர்களின் குடியுரிமை நிலைப்பாடு (Residential Status) மற்றும் வரிப்பிடித்தம் தொடர்பாக வங்கிக்கு பங்குதாரர்கள் கொடுத்துள்ள ஆவணங்களை பொறுத்து மாறுபடும்.

பங்குகளை மின்னணு பங்குகளாகவும் (Shares held in electronic form) மற்றும் பங்குப்பத்திரங்களாகவும் (Shares held in physical form) வைத்துள்ள அனைத்து பங்குதாரர்களும் முறையே தங்களது முதலீட்டு பங்கேற்பாளரிடமும் மற்றும் வங்கி அல்லது வங்கியின் பங்கு மாற்று முகவரிடமும் (S.K.D.C Consultants Limited) வருமானவரி கணக்கு எண்ணை (PAN) தங்களது அனைத்து பங்கு வரிசைகளுக்கும் பதிவு செய்து கொள்வதோடு பங்குதாரர்கள் தங்களது வரிநிர்ணயம் மற்றும் வரி பிடித்தம் தொடர்பான அனைத்து மனுக்களையும் 31.07.2021-ம் தேதிக்கு முன்பாக சமர்ப்பிக்குமாறு கேட்டுகொள்ளபடுகிறார்கள். மேலதிக தகவல்களுக்கு வங்கியின் வலைதளத்தில் https://www.kvb.co.in/investor-corner/tds-on-dividend/ என்ற தொடர்பினை காணவும்.

**<u>மின்னஞ்சல் முகவரியை பதிவு செய்யும் வழிமுறைகள்:</u>**

இதுவரை தங்களது மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளாத உறுப்பினர்கள் கீழ்க்கண்ட வழிமுறைகளை பின்பற்றி மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்:

(i) பங்குப்பத்திரம் வைத்திருக்கும் உறுப்பினர்கள் : வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரிடம் (i.e., M/s SKDC Consultants Ltd), தங்களது பெயர், பங்கு வரிசை எண் (Folio No), மின்னஞ்சல் முகவரி (e-Mail ID), அலைபேசி எண், வருமான வரித்துறை அடையாள எண் (PAN) ஆகியவற்றை குறிப்பிட்டு முறையாக கையொப்பமிடப்பட்ட விண்ணப்பத்தின் மின்னணு நகலுடன் சுயசான்று அளிக்கப்பட்ட வருமானவரி அடையாள அட்டையின் (PAN Card) மின்னணு நகலையும் இணைத்து green@skdc-consultants.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்பி பதிவு செய்து கொள்ளலாம்.

(ii) பங்குகளை மின்னணு (Demat) முறையில் வைத்திருக்கும் உறுப்பினர்கள்: மின்னஞ்சல் முகவரியினை தாங்கள் மின்னணு கணக்கு வைத்துள்ள முதலீட்டு பங்கேற்பாளரிடம் பதிவு செய்து கொள்ளலாம்.

வங்கி, பங்கு மாற்று முகவர் அல்லது முதலீட்டு பங்கேற்பாளர் ஆகியோரிடம் ஏற்கனவே தங்களது மின்னஞ்சல் முகவரியினை பதிவு செய்துள்ள பங்குதாரர்களுக்கு மின்னணு வாக்களிப்பு முறையில் பங்கேற்பதற்கு தேவையான உள்ளீட்டு (login) தகவல்களை 102வது மகாசபை கூட்ட அறிவிப்பு மற்றும் ஆண்டறிக்கையுடன் சேர்த்து அனுப்பி வைக்கப்படும்.

**<u>வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரின் தொடர்பு முகவரி மாற்றம் குறித்த விவரம்:</u>**

வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவரான (RTA) S.K.D.C Consultants Limited கீழ்கண்ட புதிய முகவரியில் 16.07.2021 முதல் செயல்படும் என்பதை வங்கியின் உறுப்பினர்களுக்கும் பங்குதாரர்களுக்கும் தெரிவித்துக் கொள்ள விழைகிறோம்:

எஸ். கே. டி. சி. கன்சல்டண்ட் லிமிடெட்.,
(லிங்க் இன்டைம் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற நிறுவனத்திற்கு முழுவதும் சொந்தமான நிறுவனம்)

"சூர்யா", 35, மே பிளவர் அவென்யு,
செந்தில் நகர் பின்புறம்,
சவுரிபாளையம் சாலை,
கோயம்புத்தூர் – 641028.
தொலைபேசி எண்: 0422-4958995, 2539835/836
தொலைநகல் எண்: 0422-2539837
மின்னஞ்சல் முகவரி : info@skdc-consultants.com

மேற்கண்ட முகவரி மாற்றத்தினை குறித்துக் கொண்டு பங்குதாரரர்கள் தங்களது விண்ணப்பங்களை வங்கியின் பதிவாளர் மற்றும் பங்கு மாற்ற முகவரின் புதிய முகவரிக்கு அனுப்பி தங்களது தேவைகளை விரைந்து பூர்த்தி செய்து கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**ஸ்ரீனிவாச ராவ் .M**
நிறுமச் செயலர்
தி கரூர் வைஸ்யா பேங்க் லிமிடெட்
(உறுப்பினர் எண் : ACS 19189)

இடம் : கரூர்
தேதி : 14.07.2021